**இலங்கை இன்ஸ்டியூட் ஒப் பயோ டெக்னொலஜி கம்பனி - 2023**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை இன்ஸ்டியூட் ஒப் பயோ டெக்னொலஜி கம்பனியின் (“கம்பனி”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை(நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1..5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| **குறித்த நியமத்தின் தொடர்புடனான இனக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 9 பிரிவின் பிரகாரம் இருப்பினை கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெருமானத்திற்கு அளவிட வேண்டிய போதும், தேறிய நிகரப் பெறுமதியை கணிப்பிடாது ரூபா 18,485,440 ஆன இருப்பு, கிரய பெறுமானத்தின் மீது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் இருப்பு கிரயத்தை கணிப்பி:வதற்காக FIFO முறையை பயன்படுத்தப்படுவதுடன் அதன் பிரகாரம் சரியான இறுதி இருப்பை கிரயத்தின் மீது கணிக்கப்பட்டு ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ளது. வருமான கூற்றில் இருப்புக்களை கணக்கிடும் போது அப் பெறுமானத்தை சந்தை பெறுமானத்துடன் ஒப்பிட்டு கணக்கீடு செய்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிக விலை மாற்றம் காரணமாக சந்தை பெறுமதி மிக உயர் மட்டத்தில் இருப்பதால் வருமானக் கூற்றில் இருப்பு பெறுமானமாக கிரய பெறுமானமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க இருப்பு பெறுமானமிடல் கிரயம் மற்றும் தேறிய நிகரப் பெறுமதி ஆகிய இரண்டையும் கவனத்திற் கொண்டு குறைந்த பெறுமதிக்கு மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அடுத்த வருடத்தின் 03 மாதங்களுக்கு முன்கூட்டிய வாடகை வருமானம் ரூபா 614,078 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகிறேன். | கணக்குகளைத் தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய வருமானத்தை மத்திரம் வருமானமாகக் கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காலை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவு | i. நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுடன் ஆண்டறிக்கையின் வரைவு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், நிறுவனத்தால் ஆண்டறிக்கையின் வரைவு ஒன்று நிதிக்கூற்று தொகுதிகளுடன் சமரப்பித்திருக்கவில்லை.<br>ii. நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் வருடாந்த ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை கணக்காய்வு திகதிவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 இன் குறித்த ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதுடன், 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்குரிய ஆண்டறிக்கை தற்போது கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறித்த ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவது அமைச்சின் கண்காணிப்பின் பின்னராவதுடன் அவர்களால் ஆவதுடன், அந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூதற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 196,064,834 ஆன பற்றாக்குறை ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 144,338,431 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 51,726,403 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ரூபா 8,296,959 ஆன ஆராய்சி வருமானம் மற்றும் ரூபா 4,448,294 ஆன அரச மீண்டுவரும் மானியம் கிடைத்திருக்கையில் நேர் கிரயம் மற்றும் நிருவாக செலவுகள் முறையே ரூபா 39,836,630 இனாலும் மற்றும் ரூபா 29,338,376 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹோமாகம பிடிபன அராமயவத்தையில் உள்ள 13.2 ஏக்கர் காணி உயிரியல் தொழிநுட்ப புத்தாக்க பூங்காவை அமைப்பதற்காக விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சிடம் கையளிப்பதற்கு ரூபா 380 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2018 ஆம் ஆண்டில செலுத்தப்பட்டதுடன், அந்த நிலத்தின் அபிவிருத்திச் செலவுகளுக்காக ரூபா 47 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பூங்காவின் செயல்பாட்டு நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதிய 2024 மே 31 திகதி வரை அந்த 13.2 ஏக்கல் நிலம் செயலற்ற நிலையில் இருந்தது. | பூரமற்ற உறுதி ஒப்படைப்பு பூங்கா அபிவிருத்திக்கு ஒரு பிரச்சனையாக உள்ளது. நிறுவனத்தினால் 2023 ஆண்டு வரை நில அபிவிருத்தி, சுவீகரித்தல், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளதுடன், நிலத்தின் பாதுகாப்பு ஒழுங்கு முறையாக பாதுகாப்பு சேவைகளை தொடர்புபடுத்த மற்றும் நீர் வழங்களை நிறுவுவதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நிலத்தின் உறுதி ஒப்படைப்பை பூர்த்தி செய்ய இயலாமை காரணமாக பூங்கா வாடகை முதலீட்டாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திட முடியாது.<br>மேலும், அமைச்சின் அதிகாரிகள் SLIBTEC பூங்கா மேம்பாட்டிற்காக செலுத்த வேண்டிய தொகையை திருப்பி அனுப்புதலும், அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கையில் UDA ஊடாக 4 வழிச் சாலை பாதை ஒதுக்கீட்டு வழங்க தாமதித்தமையும் கருத்திட்ட செயல்பாடுகளை நிறுத்துவதற்கு காரணமாகவுள்ளது. | குறித்த நிறுவனங்களுடன் தொடர்புகளை பேணுவதன் மூலம் பூங்காவின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக சட்டப் பின்னணியைத் தயாரிப்பது தொடர்பில் அவசர கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 14 உருப்படியான நுகரவுப் பொருட்களின் (ஆராய்ச்சி) ரூபா 3,551,668 ஆன பெறுமதியுடன் கூடிய பொருட்கள் பொருட்கள 2023 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்தப்படாமல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிகறிற்காக இந்த நுகர்வு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதடன், இரசாயன கூடங்களில் ஏற்பாட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக இந்த பிரச்சினை எழுந்திருந்தது. இந்த பொருட்கள் (RESEARCH CONSUMABLE) இற்காக அவ்வப் போது இரசாயன கூடத்திலிருந்து கிடைக்கும் கோரிக்கை பிரகாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் இந்த அநேகமான நுகர்வுப் பொருட்கள் காலாவதியாகாததால் எதிர்காலத்தில் பயன்படுத்த முடியும். | தேவையற்றவாறு இருப்புக்களை சேகரிப்பதை தவிர்க்க வேண்டியதுடன் ஆராய்ச்சிக்கான பொருட்களை கொள்வனவு செய்ய முன்னர் குறிப்பாக தேவைப்பாட்டை இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் திட்டமிடப்பட்ட 29 ஆராய்ச்சி கருத்திட்டங்களில் 03 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், (Ongoing) எஞ்சிய 26 கருத்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆண்டில் நிறுவனத்தினால் ஆராய்சி கருத்திட்டங்கள் ஊடாக ரூபா 8.2 மில்லியன் தொகையை வருமானமாக உழைத்துள்ளது. நிலவுகின்ற பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக, பல கருத்திட்டங்களை இலக்கு மயப்படுத்தப்பட்டுள்ளது வெளிநாட்டு மானியங்கள் மூலம் மேற்கொள்ள ஆவதுடன், நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக 2023 ஆண்டு திட்டமிட்டவாறு ADB மானியமாக பெற வேண்டியதாகவுள்ள ஆராய்சிக் கருவிகள் உரியவாறு கிடைக்காமை எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியாமைக்கு பாரிய தாக்கம் செலுத்தியுள்ளது. | நடைமுறை சாத்திய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒரு வருடத்திற்கும் மேலாக எடுக்கும் கருத்திட்டங்களை உள்ளடக்கிய மூலோபாய திட்டடொன்றை (Strategic Plan) தயாரிக்க வேண்டும். அதனை தேவையான சந்தர்பங்களில் முறையான அங்கீகாரத்துடன் திருத்தம் செய்து அதன் பிரகாரம் செயல்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தினால் 2023 ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் சேவை வழங்கல் நடவடிக்கைகளுக்காக ரூபா 117.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதனூடாக நிறுவனம் ரூபா 8.2 மில்லியன் மாத்திரமே உழைத்திருந்தது. அதன் பிரகாரம் செலவிடப்பட்ட தொகைக்கு ஒப்பாக உழைக்க முடியுமாக இருந்தது 6.97 சதவீதம் மாத்திரமே ஆகும். | 2023 ஆண்டில் ரூபா 8.2 மில்லியன் தொகை ஆராய்ச்சி சேவைகள் மூலம் ஈட்டப்பட்டுள்ளதுடன், இரதசாயன கூடங்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினையான நிலைமையினால் அந்த இரசாயன கூடங்களில் திருத்தங்கள் மற்றும் மாற்றங்களைச் செய்ய வேண்டி உள்ளதால், திட்டமிட்ட பிரகாரம் சேவை வருவானத்தை அதிகரிக்க முடியவில்லை. அதனால் இந்த இரசாயன கூட பிரச்சனை நிறுவனத்தின் திட்டமிட்ட செயல்திறன் மட்டத்தை அடைந்து கொள்வதில் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது. | நிறுவனத்தினால் செலவிட்ட தொகைக்கு ஒப்பாகும் வகையில் உச்ச பெறுபேறுகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.17 பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத் தொகையில் அதிகபட்சமாக 20 சதவீதத்தை முற்பணமாக செலுத்த முடியும். இருப்பினும், நிறுவனத்திற்கு அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது அந்த முற்பண எல்லையை மிஞ்சி ரூபா 4,761,878 தொகை அதாவது 30 சதவீதம் தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்தக் காலப்பகுதியில் நாட்டில் நிலவிய உயர் பணவீக்கம் காரணமாக பொருட்களின் விலை அதிகரித்தன் அடிப்படையில் 30 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. | முற்பணம் செலுத்தும் போது எப்போதும் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க செய்யப்பட வேண்டும். |